முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கடலூர்

முன்னிலை:-திரு.எம்.செல்வம்,,எம்.எல்,,

முதலாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி(முழு பொறுப்பு)

2017-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28-ஆம் நாள் செவ்வாய் கிழமை.

முதலேற்பு வழக்கு எண்.196/2013.

...

1. ராஜ்குமாரி
2. விசாலாட்சி
3. கசப்பு
4. இளவர் ஜெயந்தி(வயது 17)

   இளவர் 4-ம்வாதியின் பிரதிநிதி அடுத்த நண்பர் தாய் 5-ம்வாதி.

5. ராணி .... வாதிகள்

-எதிர்-

WEB COPY

1. டி.ராமலிங்கம்
2. ராஜேஸ்வரி
3. ராஜகோபால்
4. இளவர் தவமணிகண்டன்.

   இளவர் 4-ம் பிரதிவாதியின் காப்பாளர் தந்தை 1-ம்பிரதிவாதி.

5. அம்சாயி அம்மாள். .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்னர் 21.02.2017-ம் தேதியன்று முடிவான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, வாதிகளுக்காக வழக்குரைஞர் திருவாளர் ஆர்.குருராஜ் அவர்களும், இளவர் 4-ம்பிரதிவாதிக்காக நீதிமன்ற காப்பாளர் வழக்குரைஞர் செல்வி பி.சரிதா அவர்களும், 5-ம்பிரதிவாதிக்காக வழக்குரைஞர் திருவாளர் கே.வேணுகோபால் அவர்களும் முன்னிலையாகி, 1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகளை தோன்றாதரப்பினர்களாக தீர்மானித்து, இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலணை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைக்குட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்

## தீர்ப்புரை

வழக்கு ”பி” அட்டவணை சொத்துக்களில்( இதில் ”சி” அட்டவணை சேர்க்கப்பட்டுள்ளது) வாதிகளுக்குரிய எட்டில் நான்கு பாகமும் தனித்த சுவாதீனமும் கிடைக்கும்பொருட்டு பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை வழங்கக் கோரியும், அதை அனுசரித்து பாகப்பிரிவினைக்கான இறுதிநிலை தீர்ப்பாணை வழங்கக் கோரியும்,

வாதிகளின் பாகம் வாதிகளுக்கு தேவைப்பட்டால் நீதிமன்றம் மூலம் சுவாதீனம் கிடைக்கும்படிக்கும், வழக்கு "டி" அட்டவணை சொத்தில் 5-ஆம் வாதிக்குரிய உரிமையை விளம்பக் கோரியும், வழக்கு "டி" அட்டவணை சொத்தில் 5-ஆம் வாதியின் அனுபவத்தையும், சுவாதீனத்தையும், 1,3 மற்றும் 4 பிரதிவாதிகளும் மற்றும் அவர்களது ஆட்களும், முகவர்களும் அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் எவ்விதமான இடைஞ்சலும் செய்யாமல் இருக்கும்பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகளின் வழக்குரையின் சுருக்கம்:-**

(i) வழக்கு "ஏ" அட்டவணை என்பது வம்சாவழி பட்டியல். 5-ம்வாதி, முதல்பிரதிவாதியின் மனைவி. 3,4 பிரதிவாதிகள், 5-ம்வாதி மற்றும் 1-ம்பிரதிவாதியின் மகன்கள், 1 முதல் 4 வாதிகள் மற்றும் 2-ம்பிரதிவாதி ஆகியோர்கள் 5-ம்வாதி மற்றும் 1-ம்பிரதிவாதியின் மகள்கள். வழக்கு "பி" அட்டவணை சொத்து 1-ஆம் பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள். வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் இந்து கூட்டுக் குடும்பத்தை சேர்ந்தவர்கள். 3,4 வாதிகளுக்கும், 4-ஆம் பிரதிவாதிக்கும் இன்னும் திருமணமாகவில்லை. தமிழ்நாடு இந்து வாரிசுரிமை சட்டத்திற்கு (திருத்தப்பட்ட சட்டம்) பின்பு, இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு சிறிது காலத்திற்கு முன்புதான் 1,2 வாதிகள் மற்றும் 2-ஆம் பிரதிவாதி ஆகியோர்களுக்கு திருமணமானது. எனவே, வழக்கு "பி" அட்டவணை சொத்தை பொறுத்து 1 முதல் 4 வாதிகளும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் கூட்டு பங்குரிமையாளர்கள் ஆவார்கள். வழக்கு "பி" அட்டவணை சொத்துக்களில் 1 மதுல் 4 வாதிகள் தலா ஒருபாகமும் அதாவது அரை பாகமும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தலா ஒரு பாகமும் அதாவது அரை பாகமும் உரிமையுடையவர்கள்.

(ii) வழக்கு "பி" அட்டவணை சொத்துக்கள் கூட்டுக்குடும்ப மற்றும் பூர்வீக சொத்துக்கள் ஆகும். வழக்கு "பி" அட்டவணை சொத்துக்கள் எப்போதும் கூட்டுக்குடும்ப சொத்துக்களாக கருதி அனுபவித்து வரப்பட்டது. வழக்கு "பி" அட்டவணை சொத்துக்களை பொறுத்து 1-ம்பிரதிவாதி கர்த்தா ஆவார். அவர் கடந்த சில ஆண்டுகளாக குடும்பத்தின்மீது எந்தவிதமான அக்கறையும் இன்றி, குடும்பத்திற்கு வீரோதமான முறையில் செயல்பட்டு தனியாக வாழ்ந்துவருகிறார். அவர் 2-ம்வாதியின் திருமணத்திற்குகூட வரவில்லை. 2-ம் வாதியின் திருமணத்தை 1-ம்வாதியும் அவரது கணவரும் நடத்தி வைத்தனர். 1-ம்பிரதிவாதி தனியாக வாழ்வது, பொதுமக்களிடயே வாதிகளின் குடும்பத்தைப் பற்றி தவறான கருத்தை ஏற்படுத்தியுள்ளது. குடும்ப நபர்களிடம் ஒற்றுமையை கலைத்துள்ளது. சமீபகாலமாக 1-ம்பிரதிவாதி வழக்கு சொத்துக்களை பராதீனம் செய்ய முயற்சிக்கிறார். வழக்கு "பி" அட்டவணை சொத்துக்களில் ஒரு பகுதியை 1-ம்பிரதிவாதி,

WEB COPY

5-ம் பிரதிவாதிக்கு 14.6.2007ல் பதிவு கிரயம் செய்துள்ள விபரம் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் வாதிகளுக்கு தெரியவந்தது. அந்த கிரயம் தேவையற்றது. குறைந்த விலைக்கு செய்யப்பட்டுள்ளது. எனவே, அந்த கிரயம் மற்ற பங்குரிமையாளர்களை கட்டுப்படுத்தாது. மாறாக 1-ம்பிரதிவாதியின் பாகத்தை பொறுத்தமட்டில்தான் அந்த கிரயம் செல்லும். 5-ம்பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து ”சி” அட்டவணை சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும் அந்தசொத்தில் 5-ம்பிரதிவாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை. அந்த சொத்தில் 5-ம்பிரதிவாதி இறுதிநிலை தீர்ப்பாணையின்போதுதான் நேர்மை நெறியில் உரிமை கோரமுடியும்.

(iii) வழக்கு ”டி” அட்டவணை சொத்து 5-ம்வாதியால் திருமணத்தின்போது அவரது பெற்றோர்களால் அளிக்கப்பட்ட தொகை மற்றும் திருமணத்தின்போதுஅவருக்கு அளிக்கப்பட்ட நகைகளை விற்று கிடைத்த தொகைமூலம் கிரயம் பெறப்பட்டுள்ளது. எனவே, அது 5-ம்வாதியின் தனிப்பட்ட சொத்தாகும். ஆனால் பெண்கள் சொத்துக்களை வைத்திருப்பது 1-ம்பிரதிவாதிக்கு பிடிக்காது. அதனால் அவர் ”டி” அட்டவணை சொத்தை தான் பெயரில் மாற்றியுள்ளார். குடும்பத்தில் கடன் வாங்குவதும் பின்பு அதை பைசல் செய்வதும் வழக்கம். 5-ம் வாதிக்கு எழுத படிக்க தெரியாது. ”டி” அட்டவணை சொத்தின்பேரில் கடன் வாங்கவேண்டுமென கூறி, 1-ம்பிரதிவாதி கேட்டதால், 5-ம்வாதி தன் கணவரை (1-ம்பிரதிவாதி) நம்பி அவர் கேட்கும் இடத்தில் கையெழுத்து போட்டு கொடுத்ததை வைத்து ஏமாற்றி 30.1.2006 அன்று 1-ம்பிரதிவாதி தன் பெயரில் செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வாங்கிக் கொண்டார். எனவே அந்த செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது. 28.10.2013 முதற்கொண்டு 1-ம்பிரதிவாதி அனைத்து சொத்துக்களையும் மூன்றாம் நபர்களிடம் விற்க முற்பட்டார். அவ்வாறு செய்ய அவருக்கு உரிமையில்லை. எனவே, இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** 1 முதல் 3 வரையுள்ள பிரதிவாதிகளை தோன்றாதரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**4. 4-ம்பிரதிவாதியின் நீதிமன்ற காப்பாளர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

இந்த தாவா உண்மைப்படிக்கும் நியாயப்படிக்கும் சரியானதல்ல. தள்ளுபடிக்கு அருகதையானது. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள வம்சாவழி பட்டியல் சரியானது. வழக்கு ”பி” அட்டவணை சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் கூட்டுக்குடும்ப மற்றும் பூர்வீக சொத்துக்கள் என்பது உண்மைதான். அதில் 1-ம்பிரதிவாதிக்கு எட்டில் ஒரு பாகம் மட்டும் பாத்தியம். அவர் குடும்பத்தில் எந்தவிதமான அக்கறையும் இன்றி தனியாக வசித்து வருகிறார். 2-ம்வாதியின் திருமணத்திற்குகூட அவர் வரவில்லை. வழக்கு ”பி” அட்டவணை சொத்தில்

WEB COPY

5-வது அயிட்ட சொத்தை 5-ம்பிரதிவாதிக்கு கிரயம் செய்துகொடுக்க எந்தவிதமான அவசியமும் கிடையாது. அந்த கிரயம் மற்ற குடும்ப உறுப்பினர்களை கட்டுப்படுத்தாது. 5-ம்வாதியை ஏமாற்றி, 1-ம்பிரதிவாதி செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி பெற்றுள்ளார். மற்ற சொத்துக்களையும் விற்பதற்கு 1-ம்பிரதிவாதி முயற்சி செய்கிறார். அவ்வாறு செய்தால் மற்ற பாகஸ்தர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடும். இந்த 4-ம்பிரதிவாதிக்குரிய எட்டில் ஒரு பாகத்தை இந்த 4-ஆம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும்.

**5. 5-ம்பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

தாவா கோரிக்கை உண்மையானதல்ல. வாதிகளுக்கு எந்தவிதமான பரிகாரமும் கிடைப்பதற்கில்லை. வழக்குரை பத்தி 4 மற்றும் 5-ல் கூறியுள்ளவற்றை இந்த பிரதிவாதி மறுக்கிறார். வழக்கு சொத்துக்கள் 1-ம்பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள் என்பதை இந்த பிரதிவாதி மறுக்கிறார். வழக்கு சொத்துக்கள் 1-ஆம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் அதில் வாதிகள் பாகம் கோர முடியாது. வழக்கு 5வதுஅயிட்டம் ஒரு ஏக்கர் 68 சென்டில் (பழைய சர்வே எண்.694-1) 0.33.0ஏர்சை 1-ம்பிரதிவாதி, ஒரு தனலெட்சுமி அம்மாளிடமிருந்து 31.5.2004ல் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி சர்வே எண்ணில் உள்ள எஞ்சியுள்ள விஸ்தீரணம் 1-ம்பிரதிவாதியின் தாயார் அஞ்சலைக்கு பாத்தியமானது. அவருக்கு வேறு சில சொத்துக்களும் உண்டு. அவர்நல்ல மனநிலையில் இருந்தபோது சொத்துக்களை பொறுத்து 1.9.1997ல் 1-ம்பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துள்ளார். அவர் இறந்தபின்பு அந்த உயில் அமுலுக்கு வந்துவிட்டது. உயிலில் குறிப்பிட்டுள்ளபடி அஞ்சலை மற்றும் அஞ்சலையின் மகன் இறந்த செல்வகணபதியின் கடன்களை 1-ம்பிரதிவாதி பைசல் செய்துள்ளார். 1-ம்பிரதிவாதி 5வதுஅயிட்ட சொத்தை விற்பதாக கூறியதன்பேரில் 1-ஆம் பிரதிவாதி மற்றும் அவரது தாயார் அஞ்சலையிடமிருந்து இந்த பிரதிவாதி 14.6.2007-ல் வழக்கு 5வது அயிட்ட சொத்தை சரியான பிரதிபலனுக்கு கிரயம் பெற்றார். சொத்தின் சுவாதீனத்தையும் எடுத்துக்கொண்டார். இந்த பிரதிவாதி நல்லெண்ணத்தின்பேரில் சரியான பிரதிபலனுக்கு கிரயம் பெற்றவர் ஆவார். இவ்வழக்கில் பாகப்பிரிவினைக்கு தீர்ப்பாகும்பட்சத்தில் இந்த பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தை அவரது கிரயதாரரின் பாகத்தில் ஒதுக்கீடு செய்யவேண்டும். இவ்வழக்கு "தவறான வழக்குமூலம்" என்ற அடிப்படையில் பாதிக்கப்பட்டுள்ளது. வழக்கு "டி" அட்டவணை சொத்தில் 5-ம் வாதி விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளார். அந்த பரிகாரம், பாகப்பிரிவனை பரிகாரத்திற்கு முற்றிலும் வேறுப்பட்டது. 3-ம்பிரதிவாதி, 1-ஆம் பிரதிவாதியின் சட்டப்படியான மகன் அல்ல. அவர் 5-ம்வாதியின் மகனும் அல்ல. வழக்குரையில் கூறப்பட்டுள்ள ஒவ்வொன்றையும் இந்த பிரதிவாதி மறுக்கிறார். எனவே, வழக்கை செலவுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

**6.** வழக்குரை, எதிர்வழக்குரைகள் மற்றும் உள்ள ஆவணங்களை பரிசீலணை செய்து,

WEB COPY

இவ்வழக்கில் கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன:-

1. வழக்கு "பி" அட்டவணை சொத்துக்களில் வாதிகள் எட்டில் நான்கு பாகமும் தனித்த சுவாதீனமும் பெற்றிட உரிமையுண்டா?

2. 5-ம்வாதி வழக்கு "டி" அட்டவணை சொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் பெற்றிட உரிமையுண்டா?

3. 5-ம்வாதி வழக்கு "டி" அட்டவணை சொத்தை பொறுத்து 1,3,4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றிட உரிமையுண்டா?

4. 1.9.1997ல் அஞ்சலை என்பவர் 1-ம்பிரதிவாதிக்கு எழுதி வைத்துள்ள உயில் உண்மையானதா? செல்லக்கூடியதா?

5.வழக்கு 5வது அயிட்டத்தை பொறுத்து 1-ம்பிரதிவாதியும் அவரது தாயார் அஞ்சலையும் 5-ம்பிரதிவாதிக்கு 14.6.2007ல் எழுதிக் கொடுத்துள்ள கிரயம் உண்மையானதா? செல்லக் கூடியதா?

6. இந்த வழக்கு "தவறான வழக்குமூலம்" என்ற காரணத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதா?

7. வேறு என்னன பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது?

WEB COPY

**7.** இவ்வழக்கில் வாதிகளின் தரப்பில், 5-ம்வாதி வா.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ1 முதல் 6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 5-ம் பிரதிவாதி தரப்பில் 5-ம்பிரதிவாதியின் கணவர் பி.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4-ம்பிரதிவாதி தரப்பில் சாட்சி எவரும் விசாரிக்கப்படவில்லை. ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>8. எழுவினாக்கள் 1 மற்றும் 5:-</u>**

5-ம்வாதி, 1-ம்பிரதிவாதியின் கணவர் ஆவார். 5-ம் வாதிக்கும், 1-ம்பிரதிவாதிக்கும் பிறந்த மகள்கள் 1 முதல் 4 வாதிகள் மற்றும் 2-ம்பிரதிவாதி ஆவார். மகன்கள் 3,4 பிரதிவாதிகள் ஆவார்கள். வாதிகளும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் ஒரே கூட்டுக்குடும்பமாக வசித்து வந்ததாகவும், கூட்டுக்குடும்பத்தின தலைவராக 1-ம்பிரதிாவாதி இருந்து வந்தநிலையில் தாவா "பி" அட்டவணை சொத்தையும் மற்ற கூட்டுக்குடும்ப சொத்தையும், பூர்வீக சொத்தையும் கர்த்தா என்ற முறையில் 1-ம்பிரதிவாதி பராமரித்து வந்தநிலையில், 1-ம்பிரதிவாதி குடும்பத்திற்கு விரோதமாக நடந்து தனிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும், வாதிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.** 5-ம்வாதியான வா.சா.1 தனது சாட்சியத்தில் 1,2 வாதிகள் மற்றும் 2-ஆம்ப ிரதிவாதிக்கு தமிழ்நாடு திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமை சட்டம் அமுலுக்கு வந்தபிறகுதான் திருமணம் நடந்தது என்றும், தாவா "பி" அட்டவணை சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்ற முறையில் 1 முதல் 4 வாதிகளும், 1 முதல் 4 பிரதிவாதிகளும் தலா எட்டில் ஒரு பாகம் பெற்றிட

உரிமையுண்டு என்றும், இந்தநிலையில் தங்களுடைய அனுமதியில்லாமல் அவசிய தேவையின்றியும், 1-ம்பிரதிவாதி தாவா சொத்துக்களை பராதீனம் செய்ய முயற்சிப்பதாகவும், 1-ம்பிரதிவாதி தனியாக வாழ்ந்துகொண்டிருப்பது பொது மக்களிடையே தங்கள் குடும்பத்தைப்பற்றி தவறான கருத்து ஏற்பட்டுள்ளதாகவும், தங்கள் குடும்ப பெயருக்கு கலங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், 1-ம்பிரதிவாதி சொத்துக்களை பராதீனம் செய்ய முயற்சி செய்வதாகவும், இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு இரண்டுவாரம் முன்புதான் தாவா "பி" அட்டவணை 5-வது இன சொத்தில் ஒரு பகுதியை 5-ம்பிரதிவாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ள விபரம் தெரியவந்ததாகவும், மேற்படி கிரயம் தங்களை கட்டுப்படுத்தாது என்றும் சாட்சியம் அளித்துள்ளநிலையில், தாவா "பி" அட்டவணை சொத்து சம்மந்தப்பட்ட "அ" பதிவேட்டின் நகல் வா.சா.ஆ1-ஆகவும், பட்டா நகல் வா.சா.ஆ2-ஆகவும்தாவா "பி" அட்டவணை 5வது அயிட்ட சொத்து சம்மந்தப்பட்ட "அ" பதிவேட்டின் நகல் வா.சா.ஆ3-ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ1,2லிருந்து தாவா "பி" அட்டவணை சொத்துகள் 1 முதல் 4 வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக கூட்டுக்குடும்ப சொத்து என்பதை அறிய முடிகிறது.

WEB COPY

**10.** தாவா "பி" அட்டவணை 5வது அயிட்ட சொத்தை 1-ம்பிரதிவாதி, 5-ம்பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளநிலையில், அந்த சொத்தின் "அ" பதிவேட்டின் நகல் வா.சா.ஆ3-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா "பி" அட்டவணை சொத்துக்கள் பூர்வீக கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்ற வாதிகள் தெரிவித்துள்ளநிலையில் 1 முதல்4 வாதிகளின் சகோதரரான இளவர் 4-ம்பிரதிவாதி சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலும் தாவா "பி" அட்டவணை சொத்ததுகள் கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தாவா "பி" அட்டவணை 5-வது இன சொத்தில் ஒருபகுதியை கிரயம் வாங்கிய 5-ம்பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில், தாவா "பி" அட்டவணை 5-வது இன சொத்தில் ஒருபகுதியை அதாவது 0.33.0ஏர்சை 1-ஆம் பிரதிவாதி ஒரு தனலெட்சுமி என்பவரிடமிருந்து 31.5.2004ல் கிரயம் வாங்கியதாகவும், மீதமுள்ள சொத்து 1-ம்பிரதிவாதியின் தாயார் அஞ்சலை அம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், தாவா "பி" அட்டவணை 5-வது இன சொத்தில் ஒருபகுதியை முதல்பிரதிவாதியும் அவரது தாயாரான அஞ்சலை அம்மாளும் 14.6.2007ல் மறுபயனுக்கு 5-ம் பிரதிவாதிக்கு பதிவு கிரயமூலம் சொத்தை கிரயம் கொடுத்துள்ளதாக தெரிவித்தாலும் இந்த வழக்கில் 5-ம்பிரதிவாதி சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. 5-ம்பிரதிவாதியின் கணவரான பி.சா.1-ன்மூலம் 5-ம்பிரதிவாதி பெற்ற கிரயப்பத்திரத்தின் நகல் பி.சா.ஆ1-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பி.சா.1 தனது சாட்சியத்தில் வாதிகள் கோரியபடி பாகப்பிரிவினை செய்ய நீதிமன்றம் தீர்மானித்தால், வழக்கு 5-வது அயிட்ட சொத்தை 5-ஆம் பிரதிவாதியான தன்னுடைய மனைவிக்கு அவருடைய பங்காக ஒதக்க வேண்டுமென்று கூறுவதோடு, 1-ஆம் பிரதிவாதியான ராமலிங்கமும், அவரது மனைவியான 5-ம் வாதியுடன் பல வருடங்களாக வாழவில்லை என்றும், வழக்கில் சம்மந்தப்பட்ட சொத்துக்கள்

ராமலிங்கத்தின் பூர்வீக சொத்துக்கள் என்றும், ராமலிங்கத்தின் பூர்வீகசொத்துக்களில் அவரது பிள்ளைகளுக்கு தீர்ப்பாவதில் தனக்கு ஆட்சேபணை இல்லை என்றும், 1-ஆம பிரதிவாதி ராமலிங்கத்திற்கும், 5-ம் வாதி ராணிக்கும் கருத்துவேறுபாடு ஏற்படும்வரை அவர்கள் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒன்றாகத்தான் இருந்தார்கள் என்றும் ஒப்புக்கொண்டுள்ளார். 1-ம்பிரதிவாதி கூட்டுக் குடும்பத்திற்கு விரோதமாக செயல்பட்டு தனியாக வாழ்ந்துவருவதாக வழக்குரையில் வாதிகள் தெரிவித்துள்ளநிலையில், அதை பி.சா.1-ம் தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். இதிலிருந்து ராமலிங்கம் கூட்டுக்குடும்பத்தை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்துவருவதை அறிய முடிகிறது. 5-ம்பிரதிவாதி வழக்கில் சாட்சியம் அளிக்காதநிலையில், அவரது கணவரான பி.சா.1-ம் வழக்கு சொத்துக்கள் 1-ம்பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள் என்று ஒப்புக்கொண்டுள்ளநிலையில் 4-ம்வாதிக்கும், 4-ம்பிரதிவாதிக்கும் திருமணமாகதநிலையில் மற்றவர்களுக்கும் தற்போதிலிருந்து 10 ஆண்டுக்குள்தான் திருமணம் நடந்ததுஎன்று பி.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். 1-ம்வாதிக்கு 26.4.2004லும், 2-ம்வாதிக்கு 7.6.2010லும் திருமணம் நடந்துள்ளதை அவர்களது திருமண அழைப்பிதழ் வா.சா.ஆ5 மற்றும் வா.சா.ஆ6-லிருந்து அறிய முடிகிறது. இந்தநிலையில் 5-ஆம் வாதிக்கும், 1-ம்பிரதிவாதிக்கும் பிறந்த பிள்ளைகள் 1முதல் 4 வாதிகள் மற்றும் 2 முதல்4 பிரதிவாதிகள் என்ற நிலையில் தாவா ”பி” அட்டவணை சொத்துக்கள் 1-ம்பிரதிவாதியின் பூர்வீக சொத்துக்கள் என்றநிலையில் தாவா”பி” அட்டவணை சொத்துக்களில் 1 முதல் 4 வாதிகள் தலா எட்டில் ஒரு பாகம் பெற்றிட உரிமையுடையவர்கள்.

WEB COPY

**11.** 5-ம்பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தான் 1-ம்பிரதிவாதியிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தை 1-ம்பிரதிவாதி ஒரு தனலெட்சுமி என்பவரிடமிருந்து 31.5.2004ல் கிரயம் பெற்றதாக கூறினாலும் மேற்படி கிரயப் பத்திரத்தின் நகலைகூ.ட 5-ம்பிரதிவாதி தாக்கல் செய்யவில்லை. மேற்படி சொத்தானது, 1-ம்பிரதிவாதியால் அவரது தனிப்பட்ட வருமானத்தை கொண்டு கிரயம் பெறப்பட்டதாக 5-ம்பிரதிவாதியின் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. மேலும், தாவா ”பி” அட்டவணை 5-வது இன சொத்தில் ஒரு பகுதியை 1-ம்பிரதிவாதியின் தாயார் அஞ்சலை அம்மாளுக்கு பாத்தியமாக இருந்தது என்று 5-ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் தெரிவித்தாலும் அவ்வாறு அஞ்சலை அம்மாளுக்கு அந்த சொத்து பாத்தியப்பட்டிருந்தது என்பதை காண்பிக்க எந்தவிதமான ஆவணங்களும் 5-ம்பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. இந்தநிலையில் தாவா ”பி” அட்டவணை சொத்து 1-ம்பிரதிவாதிக்கும், அவரது தாயாரான அஞ்சலை அம்மாளுக்கும் பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்று 5-ம்பிரதிவாதியின் தரப்பில் குறிப்பிடுவது ஏற்புடையதாக இல்லை. 1-ம்பிரதிவாதி தாவா ”பி” அட்டவணை சொத்தை குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் குடுமப் நன்மைக்காக கிரயம் கொடுத்ததாக 5-ஆம் பிரதிவாதியின் தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மாறாக 1-ம்பிரதிவாதி கூட்டுக்குடும்பத்திற்கு விரோதமாக செயல்பட்டுஅவசியமின்றி குறைவான விலைக்கு தாவா

"பி" அட்டவணை 5வது இன சொத்தை கிரயம் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றநிலையில், பி.சா.1ம் தனது சாட்சியத்தில் 1-ம்பிரதிவாதி அவரது மனைவியுடன் பல வருடங்களாக வாழவில்லை என்றும், ராமலிங்கத்தின் தம்பி செல்வகணபதி 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டதாகவும், செல்வகணபதி இறக்கும்போது அவருக்கு வயது 25 இருக்கும் என்றும், செல்வகணபதிக்கு நிறைய கடன்கள் இருந்து என்று இராமலிங்கம் சொன்னதாகவும், செல்வகணபதி உயிருடன் உள்ளபோது அவர் வாங்கிய கடன்களை பைசல் செய்வதற்காக பி.சா.ஆ1 கிரயம் 1-ம்பிரதிவாதியால் தன் மனைவி பெயருக்கு செய்யப்பட்டதாகவும் குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். இதிலிருந்து பி.சா.ஆ1 கிரயம் வாதிகளின் குடும்ப நன்மைக்காக ஏற்படவில்லை என்பதை தெளிவாக அறிய முடிகிறது. கூட்டுக்குடும்பத்தின் நன்மைக்காக 1-ம்பிரதிவாதி சொத்தை கிரயம் கொடுக்காதநிலையில், பி.சா.ஆ1 கிரயம் 1 முதல் 4 வாதிகளையும், 2 முதல் 4 பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தாது. எனவே, தாவா "பி" அட்டவணை சொத்துக்கள் 1 முதல் 4 வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் அடங்கிய கூட்டுக் குடும்பத்திற்கு பாத்தியமான பொதுக்குடும்ப சொத்துக்கள் என்றும், தாவா "பி" அட்டவணை சொத்தில் 1 முதல் 4 வாதிகளுக்கு எட்டில் நான்கு பாகம் உரிமையுள்ளதென்றும், தாவா "பி" அட்டவணை சொத்தில் 5வது இன சொத்தில் ஒரு பகுதியை பொறுத்து, 1-ம்பிரதிவாதியும் அவரது தாயாரான அஞ்சலை அம்மாளும் 14.6.2007ல் எழுதிக் கொடுத்த கிரயப்பத்திரம் 1முதல் 4 வாதிகள் மற்றும் 2முதல் 4 பிரதிவாதிகள் ஆகியோர்களையும், வழக்கு "பி" அட்டவணை சொத்தில் அவர்களது பாகத்தையும் கட்டுப்படுத்தாது என்றும், அந்த கிரயம் 1-ம்பிரதிவாதியின் பாகத்தை பொறுத்தமட்டில்தான் செல்லும் என்றும் இந்த எழுவினாக்கள் 1 மற்றும் 5க்கு விடைளிக்கப்படுகிறது.

**12. எழுவினா4:-**

5-ம்பிரதிவாதியின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 1-ஆம் பிரதிவாதியின் தாயார் அஞ்சலையம்மாள், 1-ம்பிரதிவாதிக்கு 1.9.1997ல் நல்ல மனநிலையில் இருக்கும்போது ஒரு உயில் எழுதி வைத்துள்ளதாகவும், அந்த உயிலின் அடிப்படையில் அஞ்சலை அம்மாள் இறந்தபிறகு சொத்துக்களை அனுபவித்து கொண்டு, உயிலின்படி செல்வகணபதியின் கடன்களை 1-ம்பிரதிவாதி பைசல் செய்ததாக தெரிவித்துள்ளபோதிலும், அஞ்சலையம்மாள் எழுதி வைத்ததாக சொல்லப்படும் 1.9.1997-ம் தேதியிட்ட உயிலோ அல்லது உயிலின் நகலோ எதுவும் இந்தவழக்கில் ஆவணங்களாக தாக்கல் செய்யப்படவில்லை. மேற்ப உயிலின்படி கடன்களை அடைத்ததாக சொல்லப்படும் 1-ம்பிரதிவாதியோ அல்லது உயிலில் கண்ட சாட்சிகளோ அல்லது உயிலை எழுதியதாக சொல்லப்படும் ஆவண எழுத்தரோ இந்த வழக்கில் 5-ம்பிரதிவாதியின் தரப்பில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. இந்தநிலையில் 1-ம்பிரதிவாதிக்கு அவரது தாயார்

WEB COPY

அஞ்சலையம்மாள் எழுதிக்கொடுத்ததாக கூறப்படும் 1.9.1997-ம் தேதியிட்ட உயில் உண்மையதானதா? செல்லுந்தன்மையுடையதா? என்பதுகுறித்து இந்த வழக்கில் தீமானிக்க இயலாது என்று முடிவு செய்கின்றேன்.

**13. எழுவினாக்கள் 2 மற்றும் 3:-**

1-ம்பிரதிவாதியின் மனைவியான 5-ம்வாதி (வா.சா.1) தனது சாட்சியத்தில் தாவா "டி" அட்டவணை சொத்து தன்னுடைய தனிப்பட்ட சொத்து என்றும், திருமணத்தின்போது தனக்கு கொடுக்கப்பட்ட நகைகளை விற்று தாவா "டி" அட்டவணை சொத்துக்கள் கிரயம் வாங்கப்பட்டதாகவும், குடும்பத்தில் கடன் வாங்குவதும், பைசல் செய்வதுமாக இருந்தநிலையில், 1-ம்பிரதிவாதியான தன்னுடைய கணவர் தாவா "டி" அட்டவணை சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்க வேண்டுமென்று கூறி, எழுதபடிக்க தெரியாத தன்னிடம் கையெழுத்தை வாங்கி, தன்னை எமாற்றி 30.01.2006-ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை 1-ம்பிரதிவாதியான தன் கணவர் எழுதி வாங்கிக் கொண்டதாகவும், எனவே, 1-ஆம் பிரதிவாதி தன்னை ஏமாற்றி ஏற்படுத்திக்கொண்ட செட்டில்மெண்ட் பத்திரம் தன்னை கட்டுப்படுத்தாது என்றும், சாட்சியம் அளித்துள்ளநிலையில் 30.01.2006-ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகல் வா.சா.ஆ4-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 30.01.2006-ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதபடிக்க தெரியாத தன்னை ஏமாற்றி சொத்தை அடமானம் வைப்பதாக கூறி கையெழுத்தை பெற்று தன் கணவரான 1-ஆம் பிரதிவாதி செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வாங்கிக் கொண்டதாகவும், எனவே அந்த செட்டில்மெண்ட் பத்திரம் தன்னை கட்டுப்படுத்தாது என்று 5-ம்வாதி சாட்சியம் அளித்துள்ளநிலையில். அதை மறுத்து 1-ஆம் பிரதிவாதி இந்த வழக்கில் ஆஜராகி ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை. இந்தநிலையில் 5-ம்வாதியான வா.சா.1ன் சாட்சியத்தை ஏற்று, தாவா "டி" அட்டவணை சொத்து 5-ம்வாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், எழுத படிக்க தெரியாத 5-ம்வாதியை ஏமாற்றி மோசடி செய்து 1-ஆம்பிரதிவாதி ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ4 செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாநிலையுடையதென்றும், ஆகவே தாவா "டி" அட்டவணை சொத்து 5-ம்வாதிக்கு உரிமையானதென்றும், அதை 5-ஆம் வாதி அனுபவித்து வருவதை 1,3,4 பிரதிவாதிகளும் அவர்களது ஆட்களும் மற்றவர்களும் தடைசெய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றிட 5-ம்வாதிக்கு அருகதையுண்டு என்றும், இந்த எழுவினாக்ககள் 2 மற்றும் 3-ற்கு விடையளிக்கப்படுகிறது.

**14. எழுவினா எண்.6:-** 1 முதல் 4 வாதிகள் தாவா "பி" அட்டவணை சொத்தில் பாகம் கோரியும், 5-ம்வாதி தாவா "டி" அட்டவணை சொத்து சம்மந்தமாக விளம்புகை பரிகாரமும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி இவ்வழக்கை தாக்கல செய்து, அந்த அந்த பரிகாரங்களுக்குரிய நீதிமன்றக் கட்டணத்தையும் செலுத்தியுள்ளனர். இந்தநிலையில்

WEB COPY

5-ம்பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் 1 முதல் 4 வாதிகள் பாகம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளநிலையில், 5-ம்பிரதிவாதி தாவா "டி" அட்டவணைசொத்தை பொறுத்து விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரியுள்ளது தவறானதுள்னறும், எனவே தவறான வழக்குமூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று தெரிவித்தாலும், எவ்வகையில் தவறான வழக்குமூலத்தின் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதை 5-ம்பிரதிவாதியின் தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மேலும், இவ்வழக்கில் 1 முதல் 4 வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரத்திற்காகவும், 5-ஆம் வாதி கோரியுள்ள விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் தனித்தனியாக நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளநிலையில், இவழக்கு "தவறான வழக்குமூலம்" என்ற அடிப்படையில் பாதிக்கப்படவில்லை என்று இந்த எழுவினா எண்.6ற்கு விடையளிக்கப்படுகிறது.

**15. எழுவினா எண்.7:-**

1 முதல் 3 எழுவினாக்ககளின் தீர்வுகளின் அடிப்படையில் 1 முதல் 4 வாதிகள் வழக்கில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரமும் 5-ம்வாதி கோரிய விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் பெற்றிட வாதிகள் அருகதையானவர்கள். தாவா "பி" அட்டவணை 5வதுஅயிட்ட சொத்தின் ஒரு பகுதியை முதல்பிரதிவாதியும் அவரது தாயாரும் 5-ஆம் பிரதிவாதிக்கு பி.சா.ஆ1 கிரயப்பத்திரத்தின் வாயிலாக கிரயம் கொடுத்துள்ளனர். பி.சா.ஆ1 கிரயம் 1-ம்பிரதிவாதியின் பாகத்தை பொறுத்தமட்டில்தான் செல்லும் என்றும் எழுவினா எண்.5ல் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்தநிலையில் தாவா "பி" அட்டவணை 5வதுஇன சொத்தில் ஒரு பகுதியை கிரயம் பெற்ற 5-ம்பிரதிவாதி தனது எதிர்வழக்குரையில் இந்த பாக வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும்பசத்தில் 5-ம்பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்தை அவருக்கு அந்த சொத்தை கிரயம் கொடுத்த நபரான 1-ஆம் பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கோரியுள்ளார். இந்த நிலையில் நேர்மை நெறியின் (Equity) அடிப்படையில் 5-ம்பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து அவருக்கு கிடைக்கும்வகையில் ஒதுக்கப்படவேண்டுமென்ற 5-ம்பிரதிவாதீயின் வழக்குரைஞரின் வாதம் ஏற்புடையதாக உள்ளது. எனவே, இவ்வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்போது, பாக விகதாச்சாரபடி 5-ம்பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்து அவருக்கு கிடைக்கும்வகையில் நேர்மை நெறியின்(Equity) அடிப்படையில் ஒதுக்கப்படவேண்டுமென்று தீர்மானித்து இந்த எழுவினா எண்.7-க்கு விடையளிக்கப்படுகிறது.

**16.** முடிவாக, தாவா "பி" அட்டவணை சொத்தில் 1 முதல் 4 வாதிகளுக்கு தலா ஒருபாகவீதம் மொத்தம் எட்டில் நான்கு பாகம் உள்ளது என்று தீர்மானித்தும் தாவா "பி" அட்டவணை சொத்துக்களை எட்டு சமபாகங்களா பிரித்து அதில் 4 பாகத்தை 1 முதல் 4

வாதிகளுக்கு ஒதுக்கவேண்டுமென்றும் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. இவ்வழக்கில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படும்போது, 1-ம்பிரதிவாதிக்கு தாவா ”பி” அட்டவணை சொத்திலிருந்து கிடைக்கும் பங்கிலிருந்து விகிதாச்சாரப்படி 5-ம்பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கீடு செய்யப்படவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தாவா ”டி” அட்டவணை சொத்து 5-ம்வாதிக்கு உரிமையானதென்று விளம்புகை செய்யப்பட்டு அந்த சொத்தில் 5-ம்வாதியின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் 1,3,4 பிரதிவாதிகளும், அவர்களது ஆட்களும் எந்தவிதமான தடையும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு அவரவர்கள் செலவைஅவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்றைய 2017 ம் ஆண்டு, பிப்ரவரி திங்கள் 28-ஆம் தேதியன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,(முழு பொறுப்பு)
கடலூர்.

WEB COPY

சான்றாவணங்கள் மற்றும் சாட்சி பட்டியல்

வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ1 | 4.11.2013 | சின்னக்கண்ணு மற்றும் 10 நபர்கள் பெயரில் உள்ள ”அ” பதிவேடு |
| வா.சா.ஆ2 | 4.11.2013 | சின்னக்கண்ணு மற்றும் 10 நபர்கள் பெயரில் உள்ள பட்டா. பட்டா எண்.1717. |
| வா.சா.ஆ3 | 5.11.2013 | அம்சாயா பெயரில் உள்ள ”அ” பதிவேடு |
| வா.சா.ஆ4 | 30.1.2006 | ராமலிங்கம் என்பவருக்கு, ராணி அம்மாள் எழுதிக்கொடுத்த பதிவு தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் ஒளி நகல். |
| வா.சா.ஆ5 | 26.4.2004 | எஸ்.விஜயசங்கர் மற்றும் ஆர்.இராஜகுமாரி ஆகியோர்களின் திருமண அழைப்பிதழ் |
| வா.சா.ஆ6 | 7.6.2010 | ஜி.ராசு மற்றும் ஆர்.விசாலாட்சி ஆகியோர்களின் திருமண அழைப்பிதழ். |

5-ம் பிரதிவாதி தரப்பு சான்றாவணம்:-

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ1 | 14.6.2007 | அம்சாயா அம்மாளுக்கு, அஞ்சலை அம்மாள் மற்றும் ராமலிங்கம் ஆகிய இருவரும் எழுதிக் கொடுத்த பதிவு கிரயப்பத்திரத்தின் ஒளி நகல். |

வாதிகள் தரப்பு சாட்சி:-

வா.சா.1. திருமதி.ஆர்.ராணி(5-ம்வாதி)

5-ம் பிரதிவாதி தரப்பு சாட்சி:-

பி.சா.1. திரு.சி.சுப்பிரமணியன்(5-ம்பிரதிவாதியின் கணவர்)

WEB COPY

மு.கூ.அ.நீ.(மு.பொ.)
கடலூர்.

மு.வ.எண்.196/2013

சீரான-வரைவு ஆணையுரை

நாள்:28.02.2017 சி.1.எ.

WEB COPY